**DVC.3/2024** **, P.W.1 :** ரூத்ரதீபிகா

த.பெ , தேதி : 01.07.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனது தகப்பனார் தேனியில் ஆர்எம்டிசியில் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறார். எனது தகப்பனார் மாதம் 60,000/- ரூபாய் சம்பளம் பெற்று வருகிறார். இந்த மனுவிற்கு வழக்கின்விபரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையில் உள்ளவிபரங்களை தெரிந்து கொண்டேன். மனுவின் 5வது எதிர்மனுதாரர் செல்வராஜ் வடகாட்டுபட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதான். செல்வராஜ் அவருடைய குடும்பத்துடன் வடகாட்டுபட்டியில் வசித்து வருகிறார். எனது கணவர் அன்னம்பாரிபட்டியில் ஒரு வீடும், ரெயில்வே பீடர் ரோட்டில் ஒரு வீடும் உள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு நானும் எனது கணவரும் ரெயில்வே பீடர் ரோட்டில் உள்ள வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான் ஆனால் ஆரம்பத்தில் எனது மாமியார் வீட்டில் 2 வருடம் வசித்து வந்தேன் கடைசியாக ஒன்றரை வருடமாக ரெயில்வே பீடர் ரோட்டில் உள்ள வீட்டில் வசித்து வந்தோம்.

2) நான் தாக்கல் செய்துள்ள மனுவில் திருமண நாளியில் இருந்து எனது கணவர் மதுஅருந்தி தொந்தரவு செய்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதை போல் மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனுவிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். திருமண நாளில் இருந்து நாங்கள் பிரியும் நாள் வரை சந்தோஷமாக வாழ்ந்தோமா என்று சொன்னால் தினமும் குடித்துவிட்டு பிரச்சனை செய்து வந்தார். எனது திருமணம் 16.05.2019ம் ஆண்டு நடைபெற்றது என்றால் சரிதான். 2019

ஆண்டியில் இருந்து 2022 ம் ஆண்டிற்கு இடைபட்ட காலங்களில் எனது கணவர் மது அருந்தியாகவும், என்னை தொந்தரவு செய்ததாகவும் எதேனும் புகார் காவல் நிலைத்திலோ அல்லது சட்டப்படியான நடவடிக்கை எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மனுவில் 11.11.2022 ம் தேதி வீட்டை விட்டு வெளியேற்றியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் மீது எவ்வளவு நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் 6 மாதம் கழித்து புகார் கொடுத்தேன். 11.11.2022ம் தேதி ஏன் புகார் கொடுக்கவில்லை என்று எதுவும் குறிப்பிட்டு எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் SOR நகரில் குடியிருந்து வருகிறேன். அங்கிருந்து நகர் காவல்நிலையம் சுமார் 200 மீட்டர் தூரம் தான் இருக்கும் என்று சொன்னால் சரிதான். உண்மையிலேயே எனது கணவர் திருமண நாளில் இருந்து பிரச்சனை செய்து வந்தால் அப்போதே புகார் கொடுத்திருப்பேன் என்றும் பிரச்சனை எதுவும் நடக்காததாலும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3) எனது அப்பா, அம்மா மற்றும் எதிர்மனுதாரர் 1 முதல் 4 வரை உள்ளவர்களும் சேர்ந்து கடந்த 21.08.2019ம் தேதி ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி அந்த ஒப்பந்தப்பத்திரன் நகல் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மனுதாரர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி ஒப்பந்தத்தின் அசல் என்னிடம் உள்ளது. அந்த ஒப்பந்தப்பத்திரத்தில் நான் எனது கணவருடன் சேர்ந்து வசித்து கொள்கிறேன் என்றும், எனது தகப்பனாரிடம் 1வது எதிர்மனுதாரர் எந்த சொத்துக்களும், சீர்வரிசை பொருட்களும் கேட்க கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த செய்முறையும், சீர்வரிசைகளும் தேவையில்லை என்று பேசி முடிக்கப்பட்டது என்றால்

சரிதான். பிற்காலத்தில் இரு தரப்பினரும் சுமூகமாகும் பட்சத்தில் கள்ளர்நாட்டு முறைப்படி செயல்பட்டு கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஒப்பந்தத்தை பற்றி எனது மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பதிலுரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மறுத்து பதிலுரை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. உண்மையிலேயே எனது கணவர் குடித்துவிட்டு பிரச்சனை செய்திருந்தால் மேற்படி ஒப்பந்தத்தை போட நான் சம்மதித்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல, 1வது எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார்கள் இனிமேல் நடக்காது என்று கூறியதால் தான் மேற்படி ஒப்பந்தத்தை நாங்கள் கையொப்பம் செய்தோம். மேற்படி ஒப்பந்தத்தில் எனது கணவர் மது அருந்திவிட்டு தொந்தரவு செய்தார் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த ஒப்பந்தத்தில் யார் நகைகளை கேட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளதா என்றால் இல்லை.

4) இந்த ஒப்பந்த காலகட்டத்தில் திருமண செலவு அதிகமாகிவிட்டதால் எனது தகப்பனார் எனது நகைகளை கேட்டு பிரச்சனை செய்ததால் தான் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பா நகை கேட்டு பிரச்சனை செய்ததால் தான் மேற்படி ஒப்பந்தத்தை பற்றி இந்த மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு எனது தகப்பனார் 1வது எதிரிமனுதாரரிடமும் அவரது தகப்பனாரிடமும் 5 லட்ச ரூபாய் கடன்கேட்டதாகவும், அதனை கொடுக்க எதிர்மனுதாரர்கள் மறுத்தால் அதனை மனதில் வைத்து என்னை தூண்டி விட்டு இந்த வழக்கு செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2022ம் ஆண்டு பிரிந்த பின்பு எனது கணவருடன் சேர்ந்து வாழ கோரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல காவல் நிலையத்தில் புகார்

கொடுத்துள்ளேன். எனது காவல் நிலைய புகாரில் எனது கணவருடன் சேர்ந்து வாழ சொல்லி கோரிக்கை வைக்காமல் அவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் பதிலுரையில் ரெயில்வே பீடர் சாலை உள்ள வீட்டில் நானும் எனது குழந்தையுடன் வசிப்பதற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால தெரியும். மேற்படி விபரத்தை தெரிந்த பின்பு 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ நான் எந்த முயற்சியாவது செய்தேனா என்றால் செய்யவில்லை, நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்ததாலும் மற்ற பிரச்சனைகள் தீராததாலும் வாதி நகைகளை கொடுக்காததாலும் வழக்கிற்காக வெறுமனை எனது கணவர் அப்படி சொன்னதாலும் நான் அங்கு சென்று வர எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

5) எதிர்மனுதாரர்கள் வசம் 21 பவுன் நகை உள்ளது. நான் எவ்வளவு நகைகள் கேட்டு பரிகாரம் போட்டுள்ளேன் என்றால் 21 பவுன் நகை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் எனது பரிகாரத்தில் 58 பவுன் நகை திரும்ப கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.இடைக்கால மனுவில் 59 பவுன் நகை கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் குறிப்பிட்டு 21 பவுன் நகை மட்டும் கேட்டு பரிகாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இதே நீதிமன்றத்தில் MC 11/2023 என்று 1ம் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துளளேன் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் 1ம் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சமும் மற்ற பரிகாரமும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிர்மனுதாரரையும் அவரது குடும்பத்தார்களையும் மன ரீதியாக துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் ஜீவனாம்சம் பரிகாரம் கேட்டு இரண்டு வழக்குகள் தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த அரசியல் கட்சிலும் உறுப்பினராக இல்லை. 2022ம் ஆண்டு உசிலம்பட்டி நகராட்சிக்கு உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது என்றால் சரிதான். மூன்றாவது வார்டு கவுன்சிலராக அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தில் சார்பாக தேர்தலில் போட்டியிட்டேன் என்றால் சரிதான். அந்த போட்டியிட்ட காலத்தில் எனது பெற்றோருடன் திரும்ப பழக கூடிய வாய்ப்பு கிடைத்தது என்றால் சரியல்ல. தேர்தல் நேரத்தில் எனது அப்பாவின் உறவினர்களின் வாக்குகள் தேவைப்பட்டதால் அவர்களுடன் நான் சமரசமாக பழகி வந்தேன் என்றால் சரியல்ல. அ.மா.மு.க கட்சியில் உறுப்பினராக சேராமல் கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட முடியாது என்றால் சரியல்ல.

5) தேர்தலில் ஆணை உறுதி பத்திரம் தாக்கல் செய்வார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1வது எதிர்மனுதாரரின் சித்தப்பா கேட்டுகொண்டதற்காக நான் தேர்தலில் நின்றேன், எனது கணவர் கேட்டுகொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து செய்தேன். என்னை எதிர்த்து போட்டியிட்ட அ.தி.மு.க வை சேர்ந்த நபர் எனது கணவரின் உறவினர் என்றால் சரியல்ல ஒரே ஊர்காரர் ஆவார். மேற்படி நபர் எனது கணவரின் உறவினர் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் மேற்படி தேர்தலில் நான் நிற்கவேண்டாம் என்று கூறிய போதும் நான் அவரை மீறி தேர்தலில் நின்றேன் என்றால் சரியல்ல. எனது கணவர் கோழிப்பண்ணை வைத்துள்ளதற்கு எதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் எந்த விபரங்களையும் என்னிடம் சொன்னதில்லை அதனால் நான் தாக்கல் செய்யவில்லை ஆனால் ரூபாய் 1 லட்சம் மாதம் வருமானம் வரும் என்று என்னிடம் சொல்லியுள்ளார். நான் கோழிப்பண்ணைக்கு சென்றுள்ளேன். ஒரு கோழி

குஞ்சு எவ்வளவு நாளில் விற்பனைக்கு போகும் என்றால் 40 நாட்களில் விற்பனைக்கு வரும். அந்த கம்பெனியில் இருந்து பணங்கள் அனைத்தும் வங்கி கணக்கில் தான் வரும் என்றால் சரிதான். எனது கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் கார் கம்பெனியில் வேலை செய்து வருவதாக சொல்லியுள்ளார்கள் ஆனால் சரியாக எனக்கு விபரம் தெரியாது.

6) எனது கணவர் கோழிப்பண்ணை நடத்தி வருவதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. எனது கணவரோ அவரது குடும்பத்தாரோ கோழிபண்ணை நடத்தியதே கிடையாது என்றால் சரியல்ல.எனது கணவர் பெயரில் சக்தி லேப் எனது கணவருக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல அவருக்கு பாத்தியப்பட்டது. அவர் பெயரில் பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. சக்தி லேப் மூலம் மாதம் ஒன்றரை லட்சம் வருமானம் பெறுகிறார் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய கணவர் தற்போதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும் அதற்கு நான் தயாரா என்றால் வழக்கிற்காக எனதுகணவர் பொய்யாக சொல்கிறார். 11.11.2022 ம் தேதிக்கு பிறகு என்னுடைய நகையும் எனது துணிகளையும் நான் எடுத்து சென்றுவிட்டேன் என்றால் பாதி நகைகள் மட்டும் எடுத்து சென்றேன். எனது கணவர் அப்போது அதை வீடியோ எடுத்தார் என்றால் சரிதான். வழக்கில் நிலுவையில் இருக்கும் போது இருதரப்பிலும் சமரசத்திற்காக பேசினீர்களா என்றால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் பேசினார்கள். யார் பேசினார்கள் என்றால் எனது சின்ன மாமனார் மற்றும் பெரிய மாமனார் வந்து பேசினார்கள். அவ்வாறு பேசும் போது ஒரு வீட்டை எனது பெயரில் எழுதி வைத்தால் தான் சேர்ந்து வாழ்வோம் என்று பேசினோமா என்றால் அவ்வாறு பேசவில்லை.

7) எதிருரையில் எனது கணவர் சொல்லியுள்ள பொருட்களை தவிர மற்ற அனைத்து பொருட்களும் எனது வசம் உள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் கூடல்நகரிலுள்ள  கார் சர்வீஸ் சென்டரில் மெக்கானிக்கராக வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த மெக்கானிக் சென்டருக்கு நானும் எனது கணவரும் சென்றோம் என்றால் வழக்கு விஷியமாக பேசுவதற்காக சென்றோம். 1ம் எதிர்மனுதாரர் அங்கு எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.  மேற்படி சமரசம் பேசிய நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தயார். எனது கணவர் மனுவில் சொல்லியுள்ளது போல்  கோழிப்பண்ணையும், சக்தி லேப் எதுவும் நடத்தவில்லை என்றும் மெக்கானிக் வேலை செய்து மாதம் ரூபாய் 18000/-  சம்பாதித்து வருகிறார் என்றாலும் அதில் மற்ற போக்குவரத்து செலவு போக கையில்  15000/- கிடைக்கிறது என்றால் சரியல்ல. நான் மனுவில் எனது கணவர் அதிக வருமானம் பெறுவதாக சொன்னதற்கு எந்த ஆதராமும் தாக்கல் செய்யாததால் ஜீவனாம்சம் கேட்ட தொகை எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.  1வது எதிர்மனுதாரரை நானே தனியாக பிரிந்து சென்றதால் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் பெற எனக்கு தகுதியில்லை எனறால் சரியல்ல. நானும் எனது கணவரும் பிரிவதற்கு முன்பு ஒன்றரை வருடமாக தனி குடுத்தனமாக வாழ்ந்து வந்தோம் என்றாலும் அதனால் மற்ற எதிர்மனுதாரர்கள் மீது இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே குடும்ப வன்முறை நடந்திருந்தால்  உரிய காலத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் எதிர்மனுதாரர்களை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் காலம் கடந்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் எனக்கு எதிராக விவாகரத்து கேட்டு

எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கீரின் பார்க் பள்ளியில் எனது குழந்தையை சேர்ப்பதற்காக சென்றேன் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் எனது கணவர் என்னையும் எனது குழந்தையும் பார்க்க வந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் குழந்தை பார்க்க வந்தார் என்றும், ஆனால் கொலை மிரட்டல்விடுத்ததாக எனது கணவர் மீது நகர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் குழந்தை பார்க்க விடமாட்டுராங்க என்று கூறி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகார் சம்மதமாக என்னை விசாரித்தார்கள் என்றும் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவதாக சொல்லி மனுவை முடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. 2022 ம் ஆண்டிற்கு பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பு பஞ்சாயத்து எதுவும் பேசினார்களா என்றால் இல்லை. பஞ்சாயத்து பேசி எங்களை சேர்ந்து வாழ அழைத்தார்கள் என்றும் ஆனால் நான் எனது கணவரை பார்த்து குழந்தை உன்னுடையது கிடையாது என்றும் குழந்தை பெற நீ தகுதியானவர் கிடையாது என்று கூறி அனைவரும் முன்பு கூறி அவமானம்படுத்தினேன் என்றால் சரியல்ல.

8) என்னை தொடர்ந்து சேர்ந்து வாழ சொல்லி எதிர்மனுதாரர்கள் வற்புறுத்தியதால் தான் நான் இரண்டு வழக்குகளை போட்டு அலைகழித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரும், எனது தாயாரும் திருமணம் முடிந்த மூன்று மாத காலத்தில் எனது பெற்றோர்கள் என்னிடம் நகை கேட்டார்கள் என்று அதனை நான் கொடுக்க விருப்பப்படவில்லை என்றாலும் அதனால் 2022 ம் ஆண்டு தேர்தலுக்கு பின்பு எனக்கும் எனது பெற்றோருக்கும் சுமூகமான உறவு ஏற்பட்ட பின்பு எதிர்மனுதாரர்கள் குடும்பத்தை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது பெற்றோரின் தூண்டுதலில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

**S.d./ Ruthra Deepika**
**Taken down be me in open court**
**Read over to the witness in the**
**presence of accused and admitted**
**by HIM correct.**
**/Sd.G.Sathiya Narayanan, B.A., B.L.,**
**District Munsif cum Judicial Magistrate No.I,**
**Usilampatti.**

**DEPOSITION OF WITNESS**